# BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

## யாரை அழைப்பது என எப்படி தெரிந்துகொள்வது

*311, 211 மற்றும் 9-1-1 ஆகிய எண்கள்*

*தேவை கொண்ட குடியிருப்புவாசிகளுக்கானது*

ப்ராம்ப்ட்டன், ON (டிசம்பர் 16, 2020) – தேவை ஏற்படும் காலங்களில் ப்ராம்ப்ட்டன் குடியிருப்புவாசிகளுக்கு பலவிதமான சேவைகள் கிடைக்கின்றன; சில சமயங்களில் யாரை அழைப்பது என்று தெரிந்து கொள்வது சிரமமாக இருக்கலாம். ப்ராம்ப்ட்டன் வாசிகளுக்கு நகராட்சி சார்ந்த, சமூகம் சார்ந்த அல்லது எந்த ஒரு அவசர உதவி தேவைப்பட்டாலும், அவர்களுக்கு உதவுவதற்காகவே 311, 211 மற்றும் 9-1-1 ஆகிய எண்கள் உள்ளன.

**311**

ப்ராம்ப்ட்டன் நகரம் மற்றும் பீல் பிராந்திய அமைப்பால் வழங்கப்படும் அவசரம்-அல்லாத அனைத்து நகராட்சி அரசாங்க தகவல்கள், நலத்திட்டங்கள் மற்றும் சேவைகளுக்கு எளிதான நேரடியான அணுகலுக்கு, குடியிருப்புவாசிகள் 311 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம். 311 இல் கிடைக்கின்ற சேவைகள் பின்வருமாறு:

- பனி அகற்றுவது பற்றிய நகரின் **ப்ளோ ட்ராக்கர்** மற்றும் சம்பந்தப்பட்ட தகவல்கள்
- வாகன நிறுத்த சேவைகள் மற்றும் நடமாடும் உரிமம் பெறுதல்
- சொத்து பற்றிய கவலைகள் மற்றும் கோவிட் – 19 விஷயங்கள் உள்ளிட்ட சட்ட அமலாக்கம்
- சாலைகள் மற்றும் பக்கவாட்டு நடைபாதைகள்
- விலங்குகளுக்கான சேவைகள்

நகராட்சி சேவைகள் மற்றும் தகவல்களை எளிதாக அணுகுவதற்காக, 2019 டிசம்பரில், ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் ப்ராம்ப்ட்டன் 311 (Brampton 311 ) என்னும் ஒரு புதிய மொபைல் செயலி மற்றும் 311Brampton.ca என்ற வலைத்தளத்தை அறிமுகப்படுத்தியது. இந்தப் புதிய வலைத்தளம் மற்றும் செயலியின் மூலம், குடியிருப்புவாசிகள் தங்கள் ஸ்மார்ட்போனில், ஆன்லைனில் அல்லது 311 ஐ அழைப்பதன் மூலம் விரைவாகவும் எளிதாகவும் Service Brampton ஐ அடைய முடியும். குடியிருப்பாளர்கள் தங்களுக்கு வேண்டிய சேவைக்கான கோரிக்கைகளை இதில் சமர்ப்பிக்கலாம் மற்றும்

கண்காணிக்கலாம், சமூகத்தில் செயல்பாட்டில் உள்ள சேவை கோரிக்கைகளை தேடி அறிந்து நகராட்சி சேவைகளைப் பற்றி மேலும் அறியலாம்.

வாடிக்கையாளர் சேவையானது ஒரு நாளின் 24 மணி நேரமும், வாரத்தில் 7 நாட்களும் 150 மொழிகளில் கிடைக்கிறது.

Brampton 311 செயலியை இப்போது Google Play மற்றும் App Store ஆகியவற்றில் இருந்து தரவிறக்கிக் கொள்ளலாம்.

**211**

211 என்பது ஒரு இலவசமான மற்றும் ரகசியமான சேவையாகும், இது தங்கள் சமூகத்தினருக்கு கிடைக்கின்ற அரசு, சுகாதாரம், சமூகம் ஆகியவை சார்ந்த முழுமையான சமூக சேவைகளைக் கொண்டு தனிநபர்களையும் குடும்பங்களையும் இணைக்கிறது. மேலும் தகவலுக்கு குடியிருப்புவாசிகள் 211 ஐ தொடர்பு கொள்ளலாம்:

- சுகாதார சேவைகள் மனநலம் சார்ந்த ஆதரவுகள்
- வருமானம் பெற துணைபுரிதல் மற்றும் நிதிரீதியான ஆதரவு
- உணவு வங்கிகள் மற்றும் சாப்பாட்டு திட்டங்கள்
- வீட்டுவசதி உதவி
- மூத்த குடிமக்களுக்கான ஆதரவு சேவைகள்

211 என்ற எண்ணை அழைப்பதன் மூலம், ஆன்லைன் வழியாக, 21166 என்ற எண்ணுக்கு செய்தி அனுப்புதல், நேரலை உரையாடல் மூலமாக அல்லது gethelp@211Ontario.ca எனும் மின்னஞ்சல் வழியாக 211 என்ற எண்ணை அணுகலாம்.

**9-1-1**

9-1-1 என்பது மிக அவசர நிலைகளுக்கு மட்டுமேயானது. இந்த அவசர தொலைபேசி எண்ணானது, ஒரு அவசரம் எனும்போது, ஆம்புலன்ஸ், போலீஸ் அல்லது தீயணைப்புத்துறை ஆகியவற்றுடன் குடியிருப்புவாசிகளை இணைக்கிறது. குடியிருப்பாளர்களுக்கு உடனடி உதவி தேவைப்படும்போது 9-1-1 ஐ அழைப்பது அவசரகால சேவைகளை அடைய உதவுகிறது.

மக்கள் அல்லது சொத்தின் பாதுகாப்பு ஆபத்தில் இருக்கும்போது உடனடி உதவி தேவைப்படும் எந்தவொரு சூழ்நிலையும் அவசரநிலை என கருதப்படும். 9-1-1 அவசரநிலைகளுக்கு எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு: தீப்பிடித்தல், ஒரு குற்றம் நடந்து கொண்டிருக்கிறது அல்லது ஒரு மருத்துவ அவசரநிலை.

குடியிருப்புவாசிகள் 9-1-1 என்ற எண்ணை டயல் செய்யும் போது, அவர்களின் தொலைபேசி அழைப்புக்கு தொழில் ரீதியாக பயிற்சி பெற்ற அவசர தொடர்பாளர் ஒருவர் பதிலளிப்பார், அவர்கள் ஆம்புலன்ஸ், போலீஸ் அல்லது தீயணைப்பு துறையினருடன் இணைப்பார்கள்.

ஒரு குடியிருப்பாளர் 9-1-1 ஐ அழைத்து, தகவல்தொடர்பாளருடன் பேசவோ அல்லது அவர் சொல்வதை புரிந்துகொள்ளவோ முடியாவிட்டால், 9-1-1 தொலைபேசி அமைப்பில் தானியங்கி இருப்பிட அடையாள அமைப்பு மற்றும் தானியங்கி எண் அடையாள அமைப்பு உள்ளது. இவை அவசரநிலை தகவல் தொடர்பாளருக்கு 9-1-1 இல் அழைப்பு வந்தவுடன் அழைப்பவரின் முகவரி மற்றும் தொலைபேசி எண்ணைக் கூறுகின்றன. இந்த அம்சம் சில செல்போன்களில் இருக்காமல் போகலாம், இருப்பினும், தற்போது அதற்கான செயல்முறைகள் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன, இதனால் பெரும்பாலான செல்போன்களிலிருந்து வரும் அழைப்புகளை அதிக துல்லியத்துடன் தகவல்தொடர்பாளர்கள் கண்டுபிடிக்க முடியும்

**அறிஞர் கூற்றுக்கள்**

"ப்ராம்ப்ட்டன் நகரம் ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான நகரமாகும், மேலும் 211 மற்றும் 9-1-1 ஆகிய எண்களில் இருக்கின்ற எங்கள் கூட்டாளர்களுடன் சேர்ந்து, தேவைப்படும் நேரங்களில் குடியிருப்புவாசிகளுக்கு உதவவே நாங்கள் இங்கு இருக்கிறோம். கடந்து போய்க் கொண்டிருக்கும் இந்த ஆண்டானது நமது சமூகத்திற்கு மிகவும் கடினமான ஒன்றாகும், ஆனாலும் உதவி எப்போதுமே கிடைத்து வந்தது. யாரைத் தொடர்புகொள்வது என்பது, உதவியைப் பெறுவதற்கான முக்கியமான முதல் படியாகும். உங்களுக்கு நகராட்சி, சமூகம் சார்ந்த அல்லது அவசர சேவைகள் என எது தேவைப்பட்டாலும், நாங்கள் உங்களுக்கு ஆதரவளிக்கவே இங்கே இருக்கிறோம் என்பதை அறிந்து கொள்ளவும். "

*- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"ப்ராம்ப்ட்டன் நகரத்தில் வாழும் நமது சமூகத்தின் ஆரோக்கியமும் நல்வாழ்வுமே எங்களுக்கு மிக முக்கியமான விஷயமாகும். அனைத்து அவசரகால நகராட்சி தகவல்கள், திட்டங்கள் மற்றும் சேவைகளுக்காக Service Brampton ஊழியர்களை 24 மணி நேரமும் அடையலாம். 211 மற்றும் 9-1-1 ஆகிய எண்களில் எங்கள் கூட்டாளர்களுடன் சேர்ந்து, எங்கள் குடியிருப்பாளர்களை ஆதரிக்க எப்போது வேண்டுமானாலும் யாரோ ஒருவர் இங்கே இருந்து கொண்டிருக்கிறார். "

*- டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

" சேவைகளுக்கான அணுகல் என்பதே ஆரோக்கியத்தினை தீர்மானிப்பதற்கான முக்கிய காரணியாகும். இப்போது முன்னெப்போதைக் காட்டிலும், உணவு விநியோகம், உணவு வங்கிகள், மனநல சுகாதார

சேவைகள் மற்றும் நிதி உதவி போன்ற அனைத்து வகையான திட்டங்களுக்கும் மக்கள் விரைவான, எளிதான அணுகலுக்கான தேவை கொண்டிருக்கிறார்கள். 211 Central என்பது பிராம்ப்டன் நகரத்துடன் கூட்டாளியாக இருப்பதில் மகிழ்ச்சியடைகிறது, இது தொற்றுபரவலின் போது குடியிருப்புவாசிகள் தங்களுக்குத் தேவையான நலத்திட்டங்கள் மற்றும் சேவைகளை அணுக உதவி வருகிறது. ”

*- ஸ்யூ வில்கின்ஸன், செயல்பாட்டு இயக்கம், ஃபைண்ட்ஹெல்ப் (Findhelp) | 211 Central*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca